Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ.1/-

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ ஐப்பசி மீ 21 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 04 (07-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 301

தரத்தில் சிறந்த நவீனமான பொருட்களை நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

லக்கி பிளாஸா
67,68, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

லக்கி பிளாஸா

* பேபி ஐயிட்டம்
* மின்சார மனையியற் பொருட்கள்

மற்றும் அன்பளிப்புப் பொருட்களை நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
67, 68, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

# மன்னார் கடலில் பல சடலங்கள்!

## உருக்குலைந்த நிலையில் இருந்ததால் அடையாளம் காணாமல் அடக்கம்

மன்னார், நவம்பர்- 7

மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் பல சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஏறக்குறைய பதினேழு சடலங்கள் இவ்வாறு கண்டெடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. எனினும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

சடலங்கள் மிகவும் உருக்குலைந்த நிலையில் இருந்ததால் அடையாளம் காணாமலே அடக்கம் செய்யப்பட்டன.

கண்டெடுக்கப்பட்ட சடலங்களில் பெண்களின் சடலங்களும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

எந்தச் சம்பவத்தில், எப்படி உயிரிழந்தார்கள் என்பது குறித்து உறுதியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

எனினும் பெரும்பாலும், கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளானவர்களின் சடலங்களாகவே அவை இருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மன்னார் தாழ்வுபாடு கடற்கரைப் பகுதியில் ஆண்கள், பெண்கள் உட்பட பலரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சடலங்கள் அனைத்தும் மிகவும் உருக்குலைந்த நிலையில் இருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

சில சடலங்கள் மீனவர்களின் வலையில் சிக்கியபோது மீனவர்களால் கரைக்கு கொண்டு வரப்பட்டன.

சில சடலங்கள் மீன் சாப்பிட்ட நிலையில் காணப்பட்டன.

மீனவர்கள் அரசாங்க அதிபரிடம் அறிவித்த பின்னர் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன.

கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இவர்கள் பலியாகி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (இ-ரி-10)

### கதிரவெளியில் 7 சிப்பாய்கள் காயம்

கொழும்பு, நவ. 7

திருமலை-மட்டக்களப்பு வீதியில் கதிரவெளி என்ற இடத்தில் ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 7 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் பொலன்னறுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ-2)

### முச்சந்தி முனி



இண்டைக்கு கோயில்களிலை சூரசங்காரம். தமிழ்ப்பகுதிகளிலை மனித சங்காரம் நடத்திற சூரர்களை பூரணமாகச் சங்காரம் செய்யிறது எந்நாளோ அந்நாளே தமிழனுக்கு விடிவு......!

## இராணுவத்துடனான மோதலில்
# புலிகள் மூதூர் தளபதி கணேஷ் வீர மரணம்

யாழ்ப்பாணம், நவம்பர் 7

கடந்த புதன்கிழமை மூதூரில் இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூதூர் பிராந்திய தளபதிகளில் ஒருவரும் மூத்த உறுப்பினர்களில் ஒருவருமான மேஜர் கணேஷ் (சித்திரவடிவேல் சிற்றம்பலம், கந்தளாய்) வீரமரணம் அடைந்தார்.



இவருடன் அன்ஸர் (மூதூர்) என்ற மற்றொரு புலிகள் இயக்கப் போராளியும் மரணம் அடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேஜர் கணேஷின் மரணம் சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தனர்,

அறிக்கை விவரம் வருமாறு:

நேற்று முன்தினம் (5ஆம் திகதி) மூதூர் பச்சை நூலை முற்றுகையிட்ட இராணுவத்துடனான நேரடி மோதலில் இராணுவத்தால் சுடப்பட்டு பிற்பகல் 4 மணியளவில் மேஜர் கணேஷ் வீரமரணமடைந்தார்.

1981 முதல் விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் அங்கம் வகித்த மூத்த உறுப்பினராகிய கணேஷ் ஆரம்பம் முதலே இடம் பெற்ற அனைத்து தாக்குதலிலும் முன்னின்று போராடி விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு வழி வகுத்தார்.

### துரோகிகள் ஒழிப்பு

முப்படைகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்களால் உருக்குலைக்கப்பட்ட தமிழ் பிராந்தியமாகிய மூதூரில் 1984 இல் பிராந்திய பொறுப்பாளராக கணேஷ் நியமிக்கப்பட்டார். ஆரம்பம் முதல் துரோகிகளை ஒழித்து படிப்படியாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் வங்கி இயங்கவில்லை
#### வாடிக்கையாளர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 7

மக்கள் வங்கியின் நவீன சந்தைக் கிளை நேற்று இயங்கவில்லை.

கிளையின் ஊழியர்கள், முகாமையாளர்கள் ஆகியோர் நேற்று கிளைக்கு வழமைபோல் பணியாற்றச் சென்றிருந்தனர்.

வாடிக்கையாளர்களும் திரண்டிருந்தனர்.

ஆனால் மேலிடத்தில் இருந்து வந்த உத்தரவு ஒன்றைத் தொடர்ந்து கிளை திறக்கப்படவில்லை. திறக்கப்படமாட்டாது என்று வாடிக்கையாளருக்கும் ஊழியர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

திரண்டு நின்றோர் பெரிய ஏமாற்றத்துடன் திரும்பினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கோட்டையில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் சேதமடைந்த வங்கிக் கிளைப் பணிமனை, மறுநாள் புதன்கிழமை வழமைபோல் இயங்கியது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

### டிக்ஸிற் மீண்டும் சந்தித்தார்

கொழும்பு, நவ.7

இந்தியத் தூதர் திரு. திரு ஜே. என் டிக்ஸிற். கடந்த புதன்கிழமை மீண்டும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

கொழும்பு திரும்பிய பின்னர், திரு. டிக்ஸிற் ஜனாதிபதியைக் கடந்த திங்கள் சந்தித்துப் பேசியது ஏற்கனவே தெரிந்ததே. (இ எ)

### ஆதீனத்தில் இன்று

யாழ்ப்பாணம், நவ. 7

நல்லை ஆதீனத்தில் கடந்த ஞாயிறு ஆரம்பமான கந்தஷஷ்டிவிழா இன்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவுபெறுகின்றது.

கடந்த ஐந்து தினங்களாக பக்திப் பேருரை நிகழ்த்திவந்த அருள்மொழி அரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் இன்று 'வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே' என்ற தலைப்பில் பேசுவார். (இ-எ)

# யாழ் பல்கலைக்கழக மாணவனை காணவில்லை

## கண்டுபிடிக்க உதவுமாறு வித்தி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ் பல்கலைக்கழக மூன்றும் வருட வர்த்தக மாணவன் அருணகிரிநாதன் விஜிதரனை சென்ற செவ்வாய்க்கிழமை இரவு முதல் காணவில்லை.

இத்தகவலை யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அருணகிரிநாதன் விஜிதரன் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். திருநெல்வேலி - பலாலி வீதியில் உள்ள வீடொன்றில் வசித்து வந்தார்.

இவர் பற்றிய தகவல்களைத் தெரிந்தவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி துணைவேந்தர் வித்தியானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-9)

# இன்று பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணமற்போன யாழ் பல்கலைக்கழக மாணவனான அருணகிரிநாதன் விஜிதரனின் விடுதலைக்காக ஏனைய மாணவர்கள் இன்று வகுப்புக்களைப் பகிஷ்கரிப்பர்.

மாணவர் அமைப்புக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4-11-1986 இரவு தொடக்கம் யாழ் பல்கலைக் கழகத்தில் வர்த்தக பீடத்துறையின் மூன்றும் வருட மாணவன் விஜிதரனைக் காணவில்லை.

இவர் மாணவர் அமைப்புக் குழுவின் செயற்குழு உறுப்பினர்.

இவரைக் காணவில்லை என்று அறிந்த உடன் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலமாகச் சென்று துணைவேந்தரைச் சந்தித்தனர்.

கோரிக்கைகளைக் கூறியதுடன் விஜிதரனை விடுதலை செய்யும் நடவடிக்கையில் உடனடியாக ஈடுபடும்படியும்,

ஏனைய மாணவரின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும்படியும் துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தனை மாணவர்கள் கேட்டுக் கொண்டனர்.

மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதாக துணைவேந்தர் உறுதியளித்தார். அதனைத் தொடர்ந்து மாணவர் கலைந்து சென்றனர்.

விஜிதரனின் விடுதலைக்காக மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமை வகுப்புக்களைப் பகிஷ்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுமரத்தில் வந்த சிப்பாய்கள் மீது புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 7

பருத்தித்துறை கடல் பகுதியில் மீன்பிடிக்கும் மீனவர்களை துன்புறுத்தும் நோக்குடன் கட்டுமரங்களில் சென்ற சிப்பாய்களை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் 'சினைப்பர்' தாக்குதல் நடத்தினர்.

இதன் காரணமாக ஒரு சிப்பாய் பலியானதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் நான்குமணி அளவில் பருத்தித்துறை முனைப் பகுதியில் இச் சம்பவம் நடைபெற்றது.

புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத சிப்பாய்கள் இறந்தவரின் சடலத்தையும் எடுத்துக் கொண்டு முகாம் திரும்பினர்.

பின்னர் அங்கிருந்து மோட்டோ ஷெல் தாக்குதல் மேற்கொண்ட

(4ஆம் பக்கம் பார்க்க)




நேற்று நடைபெற்ற மௌன ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

பதவி வெற்றிடங்கள்

எம்மால் வெகு விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ள வியாபார ஸ்தாபனமொன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

1. SALES GIRLS
(அனுபவம் உள்ளவர்கள்)
2. பொதுமுகாமையாளர்
(General Manager)
(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி
15-11-1986 ஆகும்.

உங்கள் விண்ணப்பங்களை 'புலிகளின் குரல் செய்திப்பலகையில் உள்ள ஆலோசனைப் பெட்டிகளில் சேர்க்கவும்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

## சைக்கிளில் சென்ற மூவருக்கு துப்பாக்கிச் சூடு!
### ஒருவருக்கு பாம்பும் கடித்தது!!

யாழ்ப்பாணம், நவ.7

புதன்கிழமை இரவு பத்து மணி அளவில் அராலி வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மூவர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

மூவரும் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

சூட்டுக்காயத்துடன் ஓடிய ஒருவருக்கு பாம்பும் கடித்துவிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

மாரிமுத்து மகேந்திரன் (27 வயது) வல்லிபுரம் அழகராசா (35 வயது) பொன்னன் இரத்தினம் (35 வயது) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

துப்பாக்கிச் சூட்டுடன் பாம்புக் கடிக்கும் உள்ளானவர் பொன்னன் இரத்தினம். (இ-10)

# மாணவர் நடத்திய மாபெரும் மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ் மாவட்ட பாடசாலை மாணவ மாணவியர்களின் மாபெரும் மௌனஊர்வலம் நேற்று நடைபெற்றது.

யாழ் மத்திய கல்லூரி மாணவத் தலைவன் பொ. விபுலானந்தன் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானதைக் கண்டித்தும், கோட்டை இராணுவ முகாமை அகற்றக் கோரியுமே ஊர்வலம் நடத்தப்பட்டது.

மத்திய கல்லூரி மாணவர்களால் ஊர்வலம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

காலை 10 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் முத்திரைச்சந்தி வழியாக யாழ் கல்வித் திணைக்களத்தை அடைந்து அங்கிருந்து யாழ் செயலகம் வரை சென்றது.

யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளரிடமும், யாழ் அரச அதிபரிடமும் மாணவர்களால் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் கறுப்புப்பட்டி அணிந்து காணப்பட்டனர். சிலர் தம் வாயைக் கறுப்புத் துணிகளால் கட்டி இருந்தனர்.

இறுதியில் யாழ் செயலகத்தில் மாணவ பிரதிநிதிகள் உரையாற்றினர். அதைத் தொடர்ந்து அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

07-11 1986
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.05 முதல் 7.35 வரை

ராகுகாலம்:
10.35 முதல்12.05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஸ்கந்த ஷஷ்டி விரதம் பூர்த்தி

## கோட்டை முகாமை அகற்றகோரி மகஜர்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ் மாணவரின் கல்வியை பாதிக்கும் வகையிலான எந்தவித துப்பாக்கிப் பிரயோகங்களும், கொலைமுயற்சிகளும் இடம்பெறுது நடவடிக்கை எடுக்கப் படவேண்டும். இதற்காக கோட்டை இராணுவ முகாமை உடன் அகற்றுக.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ் மத்திய கல்லூரி மாணவத் தலைவர்கள் கல்விப் பணிப்பாளரிடமும், யாழ் அரச அதிபரிடமும் கையளித்தனர்.

நேற்று நடைபெற்ற மாணவர்களின் மௌன ஊர்வலத்திலேயே மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

மகஜர்களின் பிரதிகள் ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும், வெளிநாட்டு தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன,

மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

பாடசாலை நேரங்களில் யாழ் மத்திய கல்லூரி மீதும், வேம்படி மகளிர் கல்லூரிமீதும் எந்தவித ஷெல் தாக்குதலும் இடம்பெறமாட்

(4-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக்கொத்து

### இடமாற்றம்

கிளிநொச்சி, நவ. 7

கிளிநொச்சிக் கச்சேரி தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. குணராசா கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபராகப் பதவி வகித்த திரு. எஸ். வேலுப்பிள்ளை கிளிநொச்சிக் கச்சேரிக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (இ-76)

### நவராத்திரி கவிதை போட்டி முடிவு

யாழ்ப்பாணம், நவ. 7

சங்குவேலி இந்து மன்றம் அகில இலங்கை ரீதியில் நடத்திய நவராத்திரி கவிதைப் போட்டியில் பரிசுபெற்றவர்கள் விபரம் வருமாறு:

முதலிடம் பண்டிதர் மு. மயில்வாகனம் (அல்வாய்)

இரண்டாமிடம் திரு. ச. திருப்பதி (வல்வெட்டித்துறை)

மூன்றாமிடம் திரு. வி. மகாலிங்கம் (இணுவில்)

திரு. வே. சரவணபவன், திரு. ச. சொக்கலிங்கம், திரு. ச. வே. பஞ்சாட்சரம் ஆகியோர் நடுவர் குழுவில் இடம் பெற்றார்கள். (இ-9)

### வேண்டுகோள்

காங்கேசன்துறை, நவ. 7

கடற்றொழிலாளர்கள் தமக்கு ஏற்படும் பாதிப்புக்களை அப்பகுதி உதவி அரச அதிபருக்கும், கடற்றொழில் பரிசோதகருக்கும் அறிவிக்கவேண்டும். எதிர்காலத்திலாவது இதற்கான நஷ்ட ஈட்டைப் பெற அது உதவும்.

இவ்வாறு மயிலிட்டி பிரசைகள் குழு கடற்றொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-68)

### பொருட்காட்சி

வேலணை, நவ. 7

வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி பிரிவு பாடசாலைகளினதும், கொத்தணிப் பாடசாலைகளினதும் பொருட்காட்சி அண்மையில் சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (இ-167)

# அடம்பனில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், நவ. 7

மன்னார் அடம்பன் பகுதியில் அண்மையில் நடைபெற்ற இராணுவ தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க மன்னார் அரசஅதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதேவேளை, பயம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறிய பொதுமக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி உள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நிலைமை தற்போது வழமைக்கு திரும்பி உள்ளது.

அரச அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள், வழமைபோல் நடைபெறுகின்றன. (இ-10)

## தொலைதொடர்புத் திணைக்களம் பிரட்ரிக் கோட்டைக்கு இடம் மாற்றம்

திருகோணமலை, நவ. 7

திருகோணமலை தொலைதொடர்புத் திணைக்களம் பிரட்ரிக் கோட்டைக்குள் இடம் மாற உள்ளது.

பிரட்ரிக் கோட்டைக்குள்தான் இப்போது திருமலை அரச அதிபர் அலுவலகம் உட்பட பல அரச அலுவலகங்களும், இராணுவ முகாமும் இயங்குகின்றன.

கோணேஸ்வரர் ஆலயமும் கோட்டைக்குள்தான் உள்ளது.

தொலைதொடர்புத் திணைக்களக் கட்டடம் அண்மையில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்தே கோட்டைக்குள் அதனை இடம் மாற்றும் தீர்மானத்தை தந்தித் திணைக்களம் எடுத்து இருப்பதாகத் தெரியவருகிறது. (இ-எ)



கொழும்பு ஹேலீஸ் லிமிட்டெட்டின் யாழ் போட்டோ பிரின்ற் ஸ்தாபனத்தை கடந்த சனிக்கிழமை ஹேலீஸ் லிமிட்டெட்டின் வடக்கு கிழக்கு மாகாண விற்பனை முகாமையாளர் திரு. நவராசசிங்கம் விமலானந்தன் இல.380 யாழ் ஆஸ்பத்திரி வீதியில் திறந்து வைப்பதைப் படத்தில் காண்க.

இவருக்கு அருகில் திருமதி விமலானந்தனும் நிறுவன ஊழியர்களும் காணப்படுகின்றனர். (இ)

### சைக்கிள் லைசென்ஸ்

அச்சுவேலி, நவ. 7

யாழ் அபிவிருத்திச் சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தில் நூற்றுக் கணக்கான சைக்கிள்களுக்கு 1986 ஆம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. (இ-11)

## இளங்கதிர் ச.ச. நிலைய 4ஆம் ஆண்டு விழா

இளவாலை, நவ 7

இளவாலை இளங்கதிர் சனசமூக நிலைய நாலாவது ஆண்டு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

மெய்கண்டான் மகா வித்தியாலய மைதானத்திலும் ஏழூர் அரங்கிலும் முழுநாளும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இளவாலை, சித்திரமேழி, பத்தாவத்தை, மயிலங்கூடல், கருகம்பனை சனசமூக நிலையங்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமை விழாவாக இதனைக்கொண்டாடின.

திரு. இ. ரவீந்திரன் தலைமையில் மாலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பிரதம விருந்தினராக திரு. க. கதிர்காமத்தம்பி கலந்து கொண்டார்.

யாழ் வட்டாரப் பாடசாலைப் போட்டியில் முதலிடம் பெற்ற தெல்லிப்பளை நுண்மதி பாலர் பாடசாலையின் கிராமிய நடனமும், மெய்கண்டான் மகா வித்தியாலய கலாமன்றத்தின் 'புதிய ஆக்கம்' என்னும் நவீன நடனமும் பார்வையாளரைப் பரவசப்படுத்தின.

பிரதம விருந்தினர் பரிசுகளை வழங்கினார்.

ஈற்றில் கற்றோரின் பட்டிமன்றம் இடம் பெற்றது. மையப்பொருளாக ஈழத்தமிழரின் பாரம்பரிய வாழ்க்கைப் பண்புகள் இன்று மாறவில்லை – மாறியுள்ளன என்ற வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. (இ-48)

## விளையாட்டரங்கு

### ஸ்ரீகணேச வித்தியாலயம் வெற்றிக்கேடயம் பெற்றது

புங்குடுதீவு விளையாட்டுச் சங்கம் அண்மையில் நடத்திய கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயம் சம்பியன் ஆனது.

18 வயதிற்குட்பட்டோருக்கான இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்துடன், ஸ்ரீகணேச மகாவித்தியாலயம் மோதியது.

இம்மோதலின் இறுதியில் ஸ்ரீகணேச மகாவித்தியாலய வீரர்கள் 2 – 1 கோல்களால் வெற்றியீட்டினர்.

சம்பியன் ஸ்தானத்தைப் பெற்ற ஸ்ரீகணேச மகாவித்தியாலய அணிக்குக்காலஞ்சென்ற வைத்தியர் திரு. வீரவாகு தம்பிராசா ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது.

16 வயதுக்குட்பட்டோருக்கான மற்றோர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் புங்குடுதீவு மகா வித்தியாலய (பி) அணியினருடன் (ஏ) அணியினர் மோதினர்.

இம் மோதலின் இறுதியில் (பி) அணியினர் 3 – 1 கோல்களால் வெற்றியீட்டினர். இவர்களுக்கு அமரர் வே. கதிர்காமர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் பரிசளிக்கப்பட்டது.

புங்குடுதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இப்போட்டிகள் யாவும் நடைபெற்றன. பரிசளிப்பு வைபவத்திற்குப் புங்குடுதீவு விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. த. சங்கரராசா தலைமை வகித்தார். (இ-31)

## இன்றைய நெருக்கடியில் கலை, கலாசாரம் பேணப்பட வேண்டும்

கரவெட்டி, நவ. 7

நாம் இன்று நெருக்கடியான காலகட்டத்தில் வாழும் இவ்வேளை எமது பாரம்பரிய சொத்தான கலை, கலாசாரம் பேணப்பட வேண்டும். இதனைத் தமது கடமையாக கொண்டு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் செயற்பட்டு வருவது போற்றத்தக்கது.

நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடந்த இந்த விழாவிற்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க உப தலைவர் திரு. சு. நாகேந்திரம் தலைமை வகித்தார்.

வைபவத்தில் சிறப்பு விருந்தினராக உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈஸ்வரபாதம் கலந்து கொண்டார்.

நெல்லியடி ம. ம. வி. அதிபர் திரு. எஸ் ரோய் கந்தராஜா, நெல்லியடி ம. ம. வி. பழைய மாணவர் சங்கச் செயலாளர் செல்வன் எஸ். பிரபாகரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ-70)


### வகுப்புகள்

SCIENCE CENTRE KARAVEDDY

க. பொ. த (உயர்) 87ஆகஸ்ட் விரைவிடை முறையில் அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்பு. விஞ்ஞான பாடங்கள் மட்டும் ஆரம்பம்– 7-11-1986



NORTH CEYLON MASTER BAKERS ASS CIATION

வடமாகாண பேக்கரி உரிமையாளர் சங்கம்

மேற்படி சங்கம் புனரமைக்கப்பட இருப்பதால் சங்கத்திலுள்ள பழைய அங்கத்தவர்களும் புதிதாகச் சேர விரும்பும் உரிமையாளர்களும் தவறாது 9-11-86 அன்று காலை 9.30 மணியளவில் யாழ். பிரதான வீதியில் உள்ள பிறிமியர் பேக்கரியல் சமுகம் அளிக்கவும்.



## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி ● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு:

N.பாலா

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

* தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

* எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.


## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### 1987 விடுமுறைத் தினங்கள்

மானிப்பாய், நவ. 7

1987 ஆம் ஆண்டுக்கான அரசாங்க பொது விடுமுறைத்தினங்கள்வருமாறு:-

ஜனவரி 14 புதன் தமிழ் தைப்பொங்கல் தினம், ஜனவரி 14 புதன் துருது பூரணை போயா தினம்.

பெப்ரவரி 4 புதன் சுதந்திர ஞாபகார்த்த தினம், பெப்ரவரி13வெள்ளிநவம் பூரணை போயாதினம், பெப்ரவரி 26 வியாழன் மகா சிவராத்திரிதினம்.

மார்ச் 15 ஞாயிறு மெதின் பூரணை போயா தினம்.

ஏப்ரல் 13 திங்கள் பக்பூரணை போயாதினம் ஏப்ரல் 13 திங்கள் சிங்கள, தமிழ் புதுவருட நாளுக்கு முந்திய தினம். ஏப்ரல் 14 செவ்வாய் சிங்கள, தமிழ் புதுவருட தினம். ஏப்ரல் 17 வெள்ளி பெரிய வெள்ளிக்கிழமை.

மே 1 வெள்ளி மேதினம், மே 13 புதன் வெசாக் பூரணை போயா தினம், மே 14 வியாழன் வெசாக் பூரணை போயா நாளுக்கு மறுநாள். மே 22 வெள்ளி தேசியவீரர் தினம். மே 30 சனி ஈதுள்பிதிர் (நோன்பு பெருநாள்)

ஜூன் 11 வியாழன் பொசன் பூரணை போயா தினம்.

ஜூலை 10 ஞாயிறு எசல பூரணை போயா தினம்.

ஆகஸ்ட் 6 வியாழன் ஈதுள் அல்ஹா ஹஜ்ஜு பெருநாள். ஆகஸ்ட் 8 சனி அதிதிக்கினி பூரணை போயாதினம்.

செப்ரம்பர் 7 திங்கள் பின்றபூரணை போயா தினம்.

அக்டோபர் 6 செவ்வாய் வப்பூரணை போயா தினம். அக்டோபர் 21 புதன் தீபாவளிப் பெருநாள்.

நவம்பர் 5 வியாழன் மீலாத்துன் நபி (நபிகள் நாயகம் பிறந்ததினம்) நவம்பர் 5 வியாழன் இல்பூரணை போயா தினம்.

டிசம்பர் 4 வெள்ளி உந்துவப் பூரணை போயா தினம். டிசம்பர் 25 வெள்ளி நத்தார்தினம். (இ-90)

### பயிற்சி வகுப்புகள்

மானிப்பாய், நவ. 7

மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளில் 1987இல் ஆண்டு 4இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 8ஆம் திகதியும், ஆண்டு 3இல்கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இம் மாதம் 13ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை தொடர்ச்சியாக ஐந்து நாட்களிலும் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

மானிப்பாய் வட்டார கல்வி அதிகாரி திரு எஸ் தனஞ்செயன் இதனை அறிவித்துள்ளார். (இ-90)

### ஒலி நாடாக்கள் வெளியீடு

இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் வழங்கும் மூன்று புதிய ஒலி நாடாக்கள் வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிப்பார். நல்லை ஆதீன குரு மகா சன்னிதானம் அருளுரை வழங்குவார்.

கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அறிமுக உரையையும், ஆசிரியர் ச.சொக்கலிங்கம் ஆய்வுரையையும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரையையும் நிகழ்த்துவார்கள்.

கவிஞர் சோ. பத்மநாதன் யாத்த நல்லூரான் காவடிச் சிந்து, கந்தர் சஷ்டி கவசம், நித்திய பாராயண பாமாலை ஆகிய மூன்று புதிய ஒலி நாடாக்களுமே இன்று வெளியிடப்பட உள்ளன. (இ-9)

### மக்கள் முகம்

#### முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்

யாழ்ப்பாணம், நவ.7

முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர்: திரு. சோ. பாலகிருஷ்ணன் செயலாளர்: திரு. சிவனடியார் பொருளாளர்: திரு. க. தர்மலிங்கம்.

11 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (இ-எ)

#### வக்பு சபை

யாழ்ப்பாணம், நவ.7

திபாய்யிலிதிக்கா பரிபாலனசபை உறுப்பினராக முஸ்லிம் வக்பு சபையால் ஐவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்

பெயர்கள் பின்வருமாறு:- என். எம். உசைன், எம். எம், சாகுல்கமீட், எஸ். எச் றகீம், எஸ். எம். சாலி. யூ. எச். சுல்தான். (இ)

#### பாராட்டு

சுன்னாகம், நவ. 7

மழையினாலும், வெயிலினாலும் கஷ்டப்பட்ட வர்த்தகர்கள் பாதையோர விற்பனையாளர்கள் ஆகியோருக்கு சுன்னாகம் சந்தைக் கட்டடத்தில் தரமான விற்பனை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதுக்காக வலி - தெற்கு உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பாராட்டுப் பெறுகிறார். (இ-27)

#### போராளி வீர மரணம்

யாழ்ப்பாணம், நவ. 7

சென்றமாதம் 7-ஆம் திகதி மட்டக்களப்பு, வெள்ளையடிமடு என்னும் இடத்தில் கொமாண்டோக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த நேரடி மோதலில் மூதூரைச் சேர்ந்த ஞானம் என்ற போராளி வீரமரணம் அடைந்தார்.

ரோந்துவந்த அந்தக் கொமாண்டோக்களை எதிர்கொண்டு நடத்திய தாக்குதல் இது.

உயிரிழந்த போராளி ஞானத்துக்கு வீரவணக்கம் செலுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (இ-எ)

## வாழ்க்கையின் அச்சாணி பெண்களே

இளவாலை, நவ. 7

"அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி அவசியமில்லை என்ற காலம் போய் வாழ்க்கையின் அச்சாணி பெண்களே என்ற காலம் வந்துள்ளது.

இளவாலை சுகி தையற் பாடசாலை வருடாந்த டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் செல்வி எஸ். சின்னப்பு மேற்கண்டவாறு கூறினார்.

வண. தாயார் மேரியுலாலியின் தலைமையில் கலாசாலையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பாடசாலை நிர்வாகி திருமதி குணசிலி நவரத்தினசிங்கம் பாடசாலை வருடாந்த அறிக்கையை வாசித்தார்.

பழைய மாணவி செல்வி மதுபாலா அந்தோனிப்பிள்ளை சிறப்பு உரை வழங்கினார்.

கௌரவ விருந்தினராகச் சமூகமளித்த அருட்செல்வி மேரிவிக்ரறின் தமது உரையில் இந்த நூற்றாண்டில் சமூகத் தொண்டுக்குரிய கல்வியில் பெண்கள் அதிக அக்கறைகாட்டுவது பாராட்டத்தக்கது என்றார்.

திரு. ஆ. சவிரிப்பிள்ளை ஆசிரியர் வித்துவான் சந்தியாப்பிள்ளை ஆகியோர் சிறப்புரைகள் வழங்கினர்.

பிரதம விருந்தினர் சான்றிதழ்களை வழங்கியதுடன், மணப் பொருட்காட்சியையும் திறந்து வைத்தார். (இ-48)

## படித்தவர், பணக்காரர் ஊட்டச்சத்துணவில் கோட்டை விடுகின்றனர்

யாழ்ப்பாணம் நவ. 7

ஊட்டச்சத்து நிறைந்த உணவைத் தெரிந்து எடுப்பதில் படித்தவர்களும் பணக்காரர்களும் தவறி விடுகின்றனர்.

இப்படி வட இலங்கை மருத்துவக் கல்லூரி நிர்வாகசபை உறுப்பினர் டாக்டர் எஸ். சிவானந்தராசா தெரிவித்தார்.

போஷாக்கு வாரத்தை ஒட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் பேசுகையில் டாக்டர் சிவானந்தராசா சொன்னதாவது:

உணவு இன்றி மனிதன் ஒரு மாதம் வாழலாம் தண்ணீர் இல்லாவிட்டால் சில தினங்களில் உயிர் போய்விடும்.

நிறைய தண்ணீர் குடிப்பது ஒரு நல்ல பழக்கம். போஷாக்கு உணவு குறித்து மக்களுக்கு புகட்டப்ப வேண்டும்

இப்படி அவர் சொன்னார். [illegible] தலைமை வகித்தார். (இ-[illegible])

## தன்னிறைவு அடையும் நிலையில் உள்ளோம்

### கண்காட்சியில் உரை

தைக்கப்பட்ட ஆடைகளுக்கு நாம் வெளிநாட்டை நம்பி இருந்த காலம் மலை ஏறி இன்று தன்னிறைவு அடையும் நிலையில் உள்ளோம்.

கணபதி படிப்பகத்தாரின் மகளிர் தையல் கண்காட்சியைத் தொடக்கி வைத்துப் பேசிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் 1983ஆம் ஆண்டு கணபதி படிப்பகத்தினால் மங்கையர்களுக்காக உருவாக்கப்பட்ட தையல் வகுப்புகள் அதே ஆண்டு இராணுவம் மூலம் அழிக்கப்பட்டது.

பின்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு வல்வை மங்கையரின் கடும் முயற்சியினால் இன்று கண்ணைக்கவரும் கண்காட்சியினைக் காணக் கூடியதாக உள்ளது.

இப்படி அவர்கூறினார்.

மேற்படி கணபதி படிப்பகத்தாரின் மகளிர் தையல் கண்காட்சி வல்வை மகளிர் கலையரங்கத்தில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரினால் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (இ-160)


சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் பொதுநூல் நிலையத்தின் இரவல் கொடுக்கும் பகுதியிலிருந்து இரவலாகப் பெற்றுக்கொண்டு, ஒரு மாதத்திற்கும் மேலாகத் திருப்பி ஒப்படைக்காமல் வைத்திருக்கும் புத்தகங்கள் அனைத்தையும் 20 – 11 – 86-ந் திகதிக்கு முன்பாக நூலகரிடம் திருப்பி ஒப்படைக்குமாறு அங்கத்தவர்கள் அனைவரையும் தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

20 – 11 – 86-ந் திகதிக்கு முன்பு புத்தகங்களைத் திருப்பி ஒப்படைக்காத அங்கத்தவர்களினதும், இவர்களது பிணையாளர்களினதும் பெயர் விபரப்பட்டியல் இப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டு, அங்கத்தவர்கள் மீது சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதென்பதையும் மனவருத்தத்துடன் இத்தால் அறியத் தருகின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்,
(தலைவருக்காக)
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

எவன் ஒருவன் கடவுளை துவேஷிக்கிருனே அவனுக்கு ஒரு மடங்கு பாவம்தான். ஆனுல் கேட்பவனுக்கு அதைப்போல இரண்டு மடங்கு பாவம். நல்லது கேட்பவனுக்கு இரண்டு மடங்கு நல்லது நடக்கும்.

—காஞ்சி காமகோடி பீடாதிபதி.

உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை மின் சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

07-11-1986 த. பெ. இல. 23

## தமிழர் தாயகமும் மதில்மேல் பூனைகளும்

தமது பாரம்பரிய பிரதேசத்தில் சொந்த ஆட்சி ஒன்றை நிறுவக் கோரும் ஜனநாயக உரிமை தமிழ் பேசும் மக்களுக்கு உண்டு.

அவர்களின் சுயநிர்ணய உரிமை, பாரம்பரிய பிரதேசம் ஆகியவற்றை அங்கீகரிப்பதன் மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் கண்டு இப்போது நடக்கும் மோதலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

இப்படி ஒரு தீர்மானம் தமிழ்ப் பிரதேசத்தில், முழுக்க முழுக்க தமிழர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஏதோ சங்கத்தால் அல்லது அமைப்பால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதி விடாதீர்கள்.

தென்னிலங்கையில் தளம் கொண்டுள்ள இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் (சி. எம். யு. வின்) பேராளர் மாநாட்டிலேயே பிரஸ்தாப தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப சங்கத்தின் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் முழுக்க முழுக்கத் தமிழர் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் அமைந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 69 சதவீதமானேர் வாக்களித்திருக்கின்றனர்

சம்பந்தப்பட்ட தொழிற்சங்கம் அரசாங்கத்துக்கு எதிரான அணியைச் சேர்ந்தது என்பது உண்மை. ஆயினும் தமிழர்களது பாரம்பரிய பிரதேசத்தை அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு சொந்த ஆட்சி அமைக்கும் உரிமை வழங்கப்படவேண்டும் என்றும் துணிந்து கூறியிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள சங்கம் செயலளவில் எதனையும் பெரிதாகச் சாதிக்கச் சக்தியற்றது என்று சிலர் வாதாடலாம். அதுவே உண்மை நிலையாகவும் இருக்கலாம்.

ஆனுல் —

தமிழர்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அவர்களின் உரிமைப் பிரச்சினை நியாய பூர்வமாக, சமாதானமாக தீர்க்கப்பட வேண்டும். இவ்வாறுன எண்ணக்கரு தென்னிலங்கையில் முளைவிடத் தொடங்கி உள்ளது என்பதை இந்தத் தீர்மானம் எடுத்துரைக்கிறது என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும்.

தமிழருக்கு சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டும், பிரதேச சுயாட்சி வழங்க வேண்டும். இவ்வாறுகச் சில இடதுசாரிக் கட்சிகள் ஏற்கனவே வலியுறுத்தின என்பதை மறந்துவிட முடியாது.

ஆனுல் தமிழரின் பாரம்பரிய தாயகம் குறித்து ஆணித்தரமாகவும், அச்சமின்றியும் வலியுறுத்திய பெருமை திரு. வாசுதேவ நாணயக்காராவை மட்டுமே சாரும்.

மாகாணசபைத் திட்டத்தை ஆராயக் கூட்டப்பட்ட அரசியல் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொண்ட ஏனைய இடதுசாரிகள் அந்த விடயத்தில் அக்கறை காட்டியதாகக் கணக்கெடுக்க முடியவில்லை.

ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் எதனையும் விட முழு முதல் முக்கியமானது அவர்களது பாரம்பரிய பிரதேசம். சொந்த மண். அதனைக் கருத்தில் கொள்ளாத — அங்கீகரிக்காத எந்த உரிமையும்— தீர்வும்— திட்டமும் பயனற்றது.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம். சொந்த மண் இல்லாமல் சொந்த ஆட்சியும், சுயநிர்ணயமும் எப்படி உருவாக முடியும்?

இதனை ஏற்றுக் கொள்ள தென்னிலங்கை அரசும், மக்களும் மறுக்கும்வரை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு என்பது வெறும் கற்பனையாகவே முடியும்.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று திரு. வாசுதேவாவுக்கு அடுத்து குரல் கொடுத்திருக்கும் தொழிற்சங்கம் சி. எம். யூ. தான்.

இந்த முன்மாதிரியை தென்னிலங்கையின் ஏனைய முற்போக்குச் சக்திகளும் பின்பற்றலாம். அப்பகுதி மக்களுக்குப் புரிய வைக்க முயற்சிக்கலாம்.

தமிழர் தாயகத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தால் தமது அரசியல் செல்வாக்குக் குறைந்து போகும் என்ற அச்சத்தால் தான் ஏனைய முற்போக்குச் சக்திகள் இவ்விடயத்தில் பின்னிற்கின்றனவோ என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது.

தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதில் இணக்கம் இல்லாத எந்த முற்போக்கு அணியும் தமிழர் பிரச்சினையில் மதில் மேல் பூனையே என்று அடித்துக் கூறலாம்.

## குடும்பத் தலைவியருக்கு நல்லறிவு அவசியம்

கிளிநொச்சி, நவ. 7

ஒரு குடும்பத் தலைவியின் கையில்தான் குடும்ப நிர்வாகம் தங்கியுள்ளது. ஆகவே குடும்பத் தலைவியர் அனைவரும் தமது வாழ்வுக்கு ஏற்ற நல்ல அறிவு பெற்றிருத்தல் அவசியம்.

கிளிநொச்சி கச்சேரி திட்டமிடல் பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட திட்டம் செயற்படுத்தும் அமைச்சின் வளர்ந்தோருக்கான

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோர்பச்சேவ் - கோயபல்ஸ் விவகாரம்: மேற்கு ஜெர்மன் ரஷ்யாவிடம் மன்னிப்பு!

வியன்னு, நவ. 6

ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவ்வை ஹிட்லரின் பிரசாரப் பீரங்கியான கோயபல்ஸுடன் ஒப்பிட்டு மேற்கு ஜெர்மன் அதிபர் கோல் கருத்து வெளியிட்டது குறித்து மேற்கு ஜெர்மன் ரஷ்யாவிடம் மன்னிப்புக் கோரியது.

வியன்னுவில் நடைபெறும் 32 நாடுகளின் மாநாடு ஒன்றில் ரஷ்ய வெளிநாட்டமைச்சரைச் சந்தித்து மேற்கு ஜெர்மன் வெளிநாட்டமைச்சர் மன்னிப்பைக் கோரினுர்.

அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ்வீக்'குக்கு அளித்த பேட்டி ஒன்றிலே மேற்கு ஜெர்மன் அதிபர் கோர்பச்சேவ்வை கோயபல்ஸுடன் ஒப்பிட்டு பேட்டி அளித்திருந்தார்.

இப்பேட்டியை தொடர்ந்து இரண்டு அதிகாரிகள் பொன்னுக்கு மேற்கொள்ள விருந்த விஜயத்தை ரஷ்யா ரத்துச் செய்தது.

அதன் பின்னர் அந்தக் கருத்துப்பட 'நியூஸ்வீக்'குக்கு தான் பேட்டி அளிக்கவில்லை என்று மேற்கு ஜெர்மன் அதிபர் மறுத்திருந்தார்.

ஆனுல் 'நியூஸ்வீக்' சஞ்சிகையோ, பேட்டியைப் பிரசுரிப்பதற்கு முன்னர் மேற்கு ஜெர்மன் அதிபருக்குக் காட்டி அங்கீகாரம் பெறப்பட்டது என்று அறிவித்தது. (இ-எ)

### பாக் உளவாளிகள் 25 பேர் கைது

புதுடில்லி, நவ. 6

பாகிஸ்தான் உளவாளிகள் 25 பேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டனர்.

இத்தகவல் இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது. (இ-எ)

### மொரார்ஜிக்கு பலத்த பாதுகாப்பு

புதுடில்லி, நவ. 6

முன்னுள் பிரதமர் மொரார்ஜி தேசாய்க்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொலைப் பயமுறுத்தல் அவருக்கு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து மகாராஷ்டிர அரசு பொலீஸ் பாதுகாப்பு வழங்கியிருக்கிறது.

வழங்கப்பட்ட பாதுகாப்புக் குறித்து திரு. மொரார்ஜி தேசாய் திருப்தி தெரிவித்ததாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## கம்யூனிஸ்ட்-- அரசாங்க பிலிப்பீன்ஸ் பேச்சு தோல்வியில்

வெளி உலகில்

மணிலா, நவ. 6

பிலிப்பீன்ஸ் அரசுக்கும் கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற யுத்த நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தன.

எத்தனை நாட்கள் யுத்த நிறுத்தத்தை அமுல் நடத்துவது என்பதில் ஏற்பட்ட முட்டுக்கட்டை காரணமாகவே பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன.

கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரர்களின் தேசிய ஜனநாயக முன்னணி 100 நாள் யுத்த நிறுத்தம் அமுல் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது.

பிலிப்பீன்ஸ் அரசோ முதலில் "30 நாள் யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருவோம்; அதன் வெற்றியைப் பார்த்து பின்னர் நீடிக்கலாம்"— என்று வலியுறுத்தியது.

மிலான் என்ற நகரில் இருதரப்பினருக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றன.

100 நாள் யுத்த நிறுத்தம் டிசம்பர் 10 முதல் அமுல் நடத்தப்பட வேண்டும் என்று கிளர்ச்சிக்காரர்கள் வலியுறுத்தினர்.

பிலிப்பீன்ஸ் அரசோ நவம்பர் 27 முதல் அமுலுக்கு வரவேண்டும் என்று நிபந்தனை போட்டது.

'ஒரே முறையில் 100 நாள் யுத்த நிறுத்தத்துக்கு சம்மதிப்பது, கிளர்ச்சிக்காரர்கள் தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொள்ள உதவுவதாக முடியும்— இப்படி தோல்வியில் முடிந்த பேச்சுக்களின் பின்னர் அரசுப் பேச்சாளர் ஒருவர் சொன்னுர். (இ-எ)

## 5832 இலங்கையருக்கு ஆஸ்திரேலிய விஸா

சிட்னி, நவ. 6

1983 இல் இருந்து 1986 வரையான காலத்தில் 5832 இலங்கையருக்கு ஆஸ்திரேலியா அரசு விஸா வழங்கியது.

குடும்பத்துடன் குடியேற 4,457 இலங்கையர் அனுமதிக்கப்பட்டனர். 750 இலங்கையருக்கு மனிதாபிமான முறையில் விஸா வழங்கப்பட்டது.

இத் தகவலை ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் குடியகல்வு, குடிவரவு அமைச்சர் ஹர் போர்ட் ஜுவல் வெளியிட்டார்.

விஸா வழங்கும்போது இனரீதியாக கவனம் செலுத்தப்படுவது இல்லை என்றும் அமைச்சர் சொன்னுர்.

1983 ஜுனின் இறுதியில் கொழும்பில் 368 விண்ணப்பதாரர்களுக்கு விஸா வழங்கப்பட்டது.

மேலும் 256 பேரின் விண்ணப்பங்கள் இறுதி முடிவுக்காகக் காத்து உள்ளன—என்றும் அமைச்சர் சொன்னுர். (இ-எ)

## அமெரிக்க முடிவுக்கு இந்தியா ஆட்சேபம்

புதுடில்லி நவ. 6

முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் ராடர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ள விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்கும் அமெரிக்காவின் முடிவுக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் இத் தகவலை கடந்த செவ்வாய் ஆரம்பமான இந்திய நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடரில் முதல் நாள் பேசுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

பாகிஸ்தான், அமெரிக்காவிடம் இருந்து நவீன ஆயுதங்களைப் பெற்று வருகிறது.

இது குறித்து இந்தியா மிக அவதானமாக இருந்து வருகிறது — என்றும் திரு. நட்வர்சிங் சொன்னுர்.

பாகிஸ்தான் பிரச்சினை குறித்து ராஜீவ் காந்தி, இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றக் கூட்டத்தில் பேசுகையில்,

பாகிஸ்தான் விஷயத்தில் இந்தியா சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கும் - என்று சொன்னுர். (இ-எ)

### கூர்க்காலாந்து யோசனை நிராகரிப்பு

புதுடில்லி, நவ. 6

மேற்கு வங்காளத்தில் ஒரு பகுதியைப் பிரித்து கூர்க்காலந்து நாட்டை உருவாக்கும் யோசனையை இந்திய அரசு நிராகரித்து விட்டது. (இ-எ)

## குக்குடத்தை பிடித்தவன் சட்டியை நோக்குங்கள்

கூறுமடியார்கள் வினை தீர்த்த குகன் மாறுபடு சூரனை வதைத்தருளியதை நினைந்து ஐப்பசி மாதப் பூர்வ பக்ஷப் பிரதமை முதல் ஷஷ்டியீருகவுள்ள இவ்வாறு தினங்களும், சங்கற்பம் பண்ணிச் சுப்பிரமணியர் ஆலயங்களில் இருந்து வழிபாடுகள் நடத்துவதும் இந்த ஆறுநாட்களும் முருகன் புகழ்நூல்களான, திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம் கந்தரலங்காரம், கந்தர் கலிவெண்பா, கந்தரநுபூதி, கந்தர்ஷஷ்டிகவசம் ஆகிய நூல்களைப் பாராயணம் செய்வதும் ஆசாரத்துடன் ஓதிவரும் வழக்கமும் நம்மிடத்தில் இன்றும் இருந்துவருகின்றது.



இதுவுமன்றி கந்தபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் இவைகளைப் படிக்கக் கேட்டும் தாமே படித்தும் விரத நாட்களைக் கழிப்பதுமுண்டு.

இக்கந்தஷஷ்டி விரத நாட்களில் எல்லாமக்களும் அதிகாலையில் நீராடி தத்தமது நித்திய கடன்களை முடித்து ஆலயம் சென்று முருகப் பெருமானை வழிபட்டு ஆறு நாட்களும் உபவாசம் இருந்து வருகிருர்கள். அப்படி ஆறுநாட்களும் உபவாசம் இருக்கமுடியாதவர்கள் முதல் ஐந்து நாளும் ஒரு பொழுதுண்டு இறுதிநாளில் உபவாசமிருக்கலாம், அப்படி விருதமிருந்து ஷஷ்டி முடிந்ததும் மறுநாள் பாரணை செய்வது ஏற்றதாகும்.

இம் மகோன்னதமான விரதத்தை தொடர்ந்து ஆறு ஆண்டுகள் அநுட்டிக்க வேண்டும்.

"மாதந்தோறும் சுக்கிலபட்ச ஷஷ்டியிலே சுப்பிரமணியக் கடவுளை வழிபட்டு மா, பழம், பால், பானகம், மிளகு என்பவைகளுள் இயன்றது ஒன்றை உட்கொண்டு வருவது உத்தமம்"

தமிழ்க் கடவுளாகிய, எங்கள் வல்வினைகள் எல்லாவற்றையும் தீர்க்கும் கலியுகக் கருணை மூர்த்தியாகிய கந்தப்பெருமானை எல்லோரும் வழிபட்டால் இம்மையில் எல்லா பலன்களையும், மறுமையில் எல்லையில்லாப்பேரானந்தப் பெருவாழ்வை அடைவார்கள் என்று கந்தபுராணமூலம் அறியலாம். "ஒரு புலவர் ஒருவரைப் பார்த்து "குடம்" "சட்டி" இவற்றை வைத்து ஒரு பாடல் பாடச்சொன்னுர் முருக பக்தரான புலவர்" குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே" என்று பாடினுர். குக்குடம் என்ருல் கோழி —ஆகவே கோழிக்கொடியைப் பிடித்தவனை முருகனின் ஷஷ்டி விரதத்தை அனுஷ்டிக்க ஒரு குறையும் வராதென்பதே அதன் உட்பொருள்.

சூரனைச் சங்கரித்து தேவர்களைக் காத்தது போல முருகனின் அளப்பெருங்கருணையை இவ்விரதம் விளக்குவதோடு அவ்வாறே ஆன்மாக்களின் பகையான மும்மலங்களையும் சங்கரித்து ஆன்மாக்களுக்கு அருள் புரிவார் என்பதையும் குறிப்பாக எடுத்துக்காட்டும்.

அதுவுமல்லாமல் இவ்விரதத்தை அனுட்டிப்பவர் நோய் வறுமை நீங்கப்பெற்று வேண்டிய வேண்டியாங்கு யாவையும் எய்துவர். கந்தபுராணம், நமது சொந்த புராணம் நம்மிடமுள்ள ஆணவம், கன்மம், மாயை மாயாமலமான சூரபன்மாதியரை, முருகன், ஞானசக்தியாகிய வேலழித்து, நம்மை அவைகளின் கண் அகப்பட்டு அல்லற்படாமல் விட செய்யும் தத்துவத்தையேகந்தபுராணம் அடிப்படையாகக்கொண்டுள்ளது.

வேலினைக் கொண்டு வினைதீர்க்கும் வேல் முருகன் கோலமா மஞ்ஞையில் குலவிய குமரனை ஒரு சிறு மழலைமொழி பேசும் குழந்தை என்று எண்ணிய சூரபதுமன், பின்பு

### கந்தஷஷ்டி இறுதி நாள் சூரன்போர்


குமரனுடைய அழகு இளமை, தெய்வ அம்சத்தையும் கண்டுணர்ந்து மெய்மறந்து, மயங்கி நின்ருன்.

தமிழ்த் தெய்வமாகிய முருகனுடைய அழகுக்கு ஆயிரம் கோடி மன்மதர் அழகெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் முருகப் பெருமானுடைய திருவடிக்கு இணையாகாது.

சந்தவினை தீர்க்கும், கந்தன் அடியாரின் பந்த வினை நீக்கி தொல்லைகளைப் போக்குவார்.

**மலர் ஜீவன் ஸ்ரீ**

## பொய்யாமொழி



குறள்:

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின் என் காவாக்கால் என்.

பொருள்:

பலிக்கும் இடத்தில் சினம் வராமல் காப்பவனே சினம் காப்பவன்; பலிக்காத இடத்தில் காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

## வேலை வழிபடுவோருக்கு வீரமும் கல்வி செல்வமும் வாய்க்கும்

### கந்த சஷ்டி விழாவில் உரை

யாழ்ப்பாணம், நவ. 7

வேலை வழிபடுபவர்களுக்கு வீரம், கல்வி, செல்வம் ஆகிய நலங்கள் வாய்க்கும். இதனுல் தான் வேலைத் தனித்து வழிபடுகின்ற மரபு தோன்றியது.

இப்படி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் சொன்னுர்.

நல்லூர் ஆதினத்தில் நடைபெறும் கந்த சஷ்டி விழாவின் நான்காம் நாள் நிகழ்ச்சியில் "குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்று" என்ற தலைப்பில் திருமதி வசந்தா வைத்தியநாதன் பேசினுர்.

அவர் மேலும் சொன்னதாவது;

வினை மூவகைப்படும். அவை ஆகாமியம் பிராரப்தம், சஞ்சிதம்.

செய்கின்ற வினை ஆகாமியம். நுகர்கின்றவினை பிரகரப்தம் இருப்பாக இருக்கின்ற பழவினை சஞ்சிதம்.

கிரௌஞ்சகிரி தொல்வினையாகிய சஞ்சித வினையின் ஈட்டம் அதனை முருகனுடைய வேல் அழித்தது.

இதனை அருணகிரிநாதப் பெருமான் "வினையோட விடும் கதிர்வேல் மறவேன்" என்று போற்றுவார்.

"வெல் என்ற சொல்லின் முதனிலை நீண்டு வேல் என்ருயிற்று வெல்லுவது வேல் அறியாமை இருளைக் களைவது அறிவு எனும்ஒளி. அறிவு ஆழ்ந்து அகன்று, நுனித்து இருக்க வேண்டும்.

ஞானம் பிகையான அன்னை பராசக்தியே வேல் வடிவாகி கந்தப் பெருமான்கரத்து அமர்ந்தாள். அம்மையின், வலக்கண், இடக்கண்ணினின்று தோன்றிய அலைமகளும், கலைமகளும் இணைந்து உறைவதும் வேற்படையில் தான்.

நல்லூர் முதலிய புண்ணியப் பதிகளில் வேற்பெருமானே மூலஸ்தானத்திலே எழுந்தருளி, அருள் மழை பொழிகின்ருர்.

இப்படி திருமதி வசந்தா வைத்தியநாதன் சொன்னுர். (இ-எ)

## நாடகங்கள் மூலம் மக்களைச் சிந்திக்க வைக்கலாம் கல்விப் பணிப்பாளர் கூறுகிருர்

யாழ்ப்பாணம், நவ. 7

நாடகங்கள் மூலம் மக்களை சிந்திக்க வைப்பதன் மூலம் சமுதாயப் பிரச்சினைகளை நாம் தீர்க்க முயலவேண்டும்

யாழ். பிரதேச கல்வித் திணைக்கள பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினுர்.

யாழ். நாடக அரங்கக் கல்லூரியின் ஆதரவுடன் நல்லூர் கல்விவள நிலையம் நடத்திய நல்லூர் வட்டார பாடசாலை ஆசிரியர் மாணவருக்கான நாடகக் களப் பயிற்சியில் உருவான சமூக நாடகமான 'தியாகத் திருமணம்' அரங்கேற்றமும்; கல்விவள நிலையம் ஆறும் ஆண்டு நிறைவுவிழா நிகழ்ச்சிகளும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றன.

விழாவை மங்கள விளக்கேற்றி தொடக்கி வைத்து [illegible] லேயே கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு பேசினுர்.

கல்விவள நிலையத் தலைவரும் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரியுமான திரு. சு. சிவநாயகமூர்த்தி தலைமையில் விழா நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கல்வியதிகாரி திரு. கு. சோமசுந்தரம் கலந்து கொண்டார்.

நல்லூர் கல்விவள நிலைய நாடகச் செயற்றிட்ட நெறியாளர் திரு. ம. சண்முகலிங்கம், கல்வி அதிகாரி, திரு. க. கந்தசாமி; திரு. க. சொக்கலிங்கம், திரு. பி. நடராசா ஆகியோரும் உரையாற்றினர். (இ-5)

### முன்னுள் எம்.பி விடுதலை

கொழும்பு, நவ. 7

முல்கிரிகலை இடைத் தேர்தல் தொடர்பான இரட்டைக் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பெலியத்த முன்னுள் எம்.பி திரு. மகிந்த ராஜபக்ஷாவை மாத்தறை நீதிவான் விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் முன்னுள் எம்.பி. உட்படமூவர் மீது கொலைக்குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

விசாரணை முடிவில் மூன்று எதிரிகளையும் நீதிவான் விடுதலை செய்தார். (இ1எ)

## துயர் துடைக்கும் பணிகளில் மதத் தலைவர்கள் ஈடுபடுதல் அவசியம்

காங்கேசன்துறை நவ. 7

மதத் தலைவர்கள் மதம் சம்பந்தமான பணிகளில் மட்டுமல்லாமல் மக்களின் துயர் துடைக்கும் பணிகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வேளாங்கண்ணி ஆலய முன்றலில் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் கலந்து கொண்டு பதிலுரை வழங்குகையில் வண. தேவராஜன் அடிகள் மேற்கண்டவாறு கூறினுர்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வேளாங்கண்ணி ஆலயம் தெல்லிப்பழை புனித யாகப்பர் ஆலயம், வீமன்காமம் யுவானியார் ஆலயம் ஆகியவற்றின் பங்கு மக்களும், கிறிஸ்தவ கத்தோலிக்க சமயத்தவர்களும், மனநோயாளர் நலன்புரிச் சங்கத்தினரும் வைபவத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தலைமை வகித்தார். (இ-68)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்நகரில்
பத்து ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக
ரெலிபோன் சேவையிலேயே கண்ணும்
கருத்தும் உள்ள ஒரே ஒரு நிறுவனம்

ரெலிகுளோப்

ரெலிபோன்: 25088 – பத்து சமாந்தர லைன்கள்.

# உதயன்

07 - 11 - 1986 வெள்ளிக்கிழமை

ரெலிகுளோப்
ரெலிபோன் சேவையில்
வல்லவர்கள் — நல்லவர்கள்

ரெலிகுளோப்
ஆர். ஜி. கட்டடம், ஸ்ரான்லி வீதி
யாழ்நகர்.

## முகாம்களிலிருந்து வெளியேறிய சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம்

பலாலி, நவ. 7

பலாலி முகாமிலிருந்தும், வயாவிளான் மினி முகாம்களில் இருந்தும் வெளியேறிய இராணுவம், முகாம்களைச் சுற்றியுள்ள சுமார் 300 மீற்றர் தூரம் வரை வந்து பனங்கூடல், பற்றைக் காடுகளுக்குள் நின்றபடி சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

புதன்கிழமை இச் சம்பவம் நடந்தது.

வயாவிளான்-வடமூலை பலாலி வடக்கு, திடற்புலம் கிழக்கு பகுதிகளில் நாள் முழுவதும் இராணுவத்தினர் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பலாலி முகாமுக்கும் வயாவிளான் மினி முகாம்களுக்கும் இடையில் உள்ள 7க்கும் மேற்பட்ட வீடுகள் குண்டு வைத்து உடைக்கப்பட்டன என்று தெரிகிறது.

இதே நேரம் நீண்ட நாட்களுக்குப்பின் வயாவிளான், புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் ஏழாலைப்பகுதிகள் ஊடாக ஹெலிக்கொப்டர் ஒன்று பறந்தவாறு வேட்டுகளைத் தீர்த்தது.

எவருக்கும் உயிர், உடற் சேதங்கள் ஏற்படவில்லை. (இ-119)

### பழக்கடையில் திருட முயற்சி

பலாலி, நவ. 7

நள்ளிரவில் பழக்கடை ஒன்றினுள் திருட முனைந்த இருவர் இயக்கப் போராளிகளிடம் பிடிபட்டனர்.

இந்த சம்பவம் அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு அண்மையிலுள்ள பஸ் நிலையக்கடை ஒன்றில் இடம்பெற்றது.

மற்றொரு கடை ஒன்றின் சிற்றூழியராகக் கடமை புரியும் இந்த இருவரையும் போராளிகள் அழைத்துச் சென்று விசாரித்தபோது முன்பு நடைபெற்ற பல திருட்டுச் சம்பவங்களும் வெளிவந்தனவாம்.

விசாரணைக்காக இவ்விருவரும் இளைஞர்களின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-1 9)

### அர்ச்சுனா வாசகர்களே!

எண் சிலம்பம் போட்டி இல: 1 முடிவு திகதி 15-11-86 வரை பின்போடப்பட்டுள்ளது. நீங்களும் அதில் பங்குபற்றி உங்கள் கணித அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உ
சிவமயம்

‘சிற்றி ஏஜென்சி”
புதிய பலசரக்கு வியாபார நிறுவனம்

திறப்பு விழா

இல. 158-160,
யாழ் நகர் ஸ்ரான்லி வீதியில்,

சிற்றி ஏஜென்சி

என்னும் புதிய பலசரக்கு வியாபார நிறுவனத்தை

7-11-86 வெள்ளிக்கிழமை

காலை 9 மணிக்கும் 11 மணிக்கு மிடையிலுள்ள சுபநேரத்தில் திருவருள் துணைகொண்டு ஆரம்பித்து வைக்கிறோம்.

எமது மதிப்பார்ந்த வாடிக்கையாளர்கள் அன்புசால் நண்பர்கள் அனைவரையும் இவ்வைபவத்திற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்

எஸ். வி. எம். குணரத்தினம்
பங்காளர்: எஸ். வி. எம். நிறுவனம்

உடன் விற்பனைக்குண்டு

விரைவில் பலன் தரக்கூடிய நல்ல இன தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு. தென்னை ஆராய்ச்சியாளர்களின் போதனைக்கமைய நாற்றுப் போடப்பட்டவை.

விலை ரூபா 4-00

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி;-
ஷப்ரு றிலேற்றஸ் தென்னந்தோட்டம்,
குடமியன்,
வரணி.

மே/பா உதயன்,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 – ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 07 – 11 – 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 No 86

## தமிழரைப் பிரதிநிதித்துவம் செய்ய

# போராளிகளுக்கு சட்டபூர்வ உரிமை

## உண்டு என்கிறார் அமிர்; ‘ஒன்லூக்கர்’ சஞ்சிகைக்கு பேட்டி

புதுடில்லி நவ. 6

தங்களின் தியாகத்தினால், போராட்டத்தினால் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டபூர்வ, தார்மீக உரிமையைத் தமிழ்ப் போராளிகளும் பெற்றுவிட்டார்கள்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

‘ஒன்லூக்கர்’ என்ற இந்திய ஆங்கிலவார சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில், ‘இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழ்ப் போராளிகளின் பங்கு’ என்பதுபற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு. அமிர்தலிங்கம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த சஞ்சிகையில், (செப்டம்பர் 30 இதழில்) திரு. அமிர்தலிங்கத்தின் பேட்டி வெளியானது:

அதில அவர்கூறியிருப்பதாவது:-

நாம மக்களால்தெரிவு செய்யப்பட்டவர்கள்என்பது ஓரளவுக்குச் சரியானது. ஆனால் எம்மைத் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் 1977இல் நடந்தது.

இனி நடைபெறப் போகும் பேச்சுக்களில் போராளிகளும் கலந்துகொள்ளவேண்டும். இறுதித் தீர்வு போராளிகள் பங்குபற்றாமல் காணப்படமுடியாது.

போராளிகளின் வீரப் போராட்டம், தியாகம் ஆகியவற்றினால்தான் தமிழர் பிரச்சினை உலக அரங்கில் இவ்வளவு தூரம் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது

இப்படி திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

### காலவரையறை

உடன்பாடு எட்டுவதற்குக் காலவரையறை எதுவும் வைத்திருக்கிறீர்களா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. அமிர்தலிங்கம் சொன்னதாவது:—

பிரச்சினைக்குத் தீர்வு



காண எவ்வளவு காலம் எடுக்கும் என்ற கேள்விக்கே இடமில்லை.

நீண்டகாலம் எடுக்குமானால் மக்கள் உயிரிழப்பதும் அதிகரித்துக் கொண்டேபோகும்.

1983 இன் பின்னர் 10,000க்கு அதிகமானோர் உயிரிழந்து விட்டனர்.

30 லட்சம் தமிழ் மக்களின் பொருளாதார வளம் அழிக்கப்பட்டு விட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் 42 கிராமங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

### இந்திய பங்களிப்பு

“இனப் பிரச்சினைத் தீர்வு காண்பதில் இந்தியாவின் பங்களிப்பு எப்படி அமைய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்” என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையில் திரு. அமிர்தலிங்கம் சொன்னதாவது;

நடுநிலைமை வகிக்கும் நிலையில் இருந்து விலகி இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா முன்வரவேண்டும் — என்றார். (அ-எ)

### உதைபந்தாட்டம் இன்று இல்லை

யாழ்ப்பாணம், நவ 7

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவேண்டிய அரை இறுதி உதைபந்தாட்டம் எதிர்வரும் 10ஆம்திகதி மாலை 3 00 மணிக்கு சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் (இ)

### இன்று...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கரிப்பர்.

இது தொடர்பாக தொடர்ச்சியான நடவடிக்கைகளைப் பற்றி அமைப்புக்குழு ஆராய்ந்து வருகிறது

இப்படி மாணவர் அமைப்புக்குழு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(இ - எ)

### குடும்பத்---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போஷாக்கு பயிற்சி நெறி அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு ஏ. ஜே செந்தில்நாதன் மேற்கண்டவாறு கூறினார்.

முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சி கச்சேரி சிரேஷ்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. வி செ. சுவாமிநாதன் தலைமையில் கால்கோள் செய்யப்பட்ட இவ் வைபவத்திற்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜே செந்தில்நாதன், கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் எம். எம் மன்சூர் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

கிளிநொச்சி தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபரும், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபருமான திரு [illegible] ராசா சிறப்புரை நிகழ்த்தினார். (இ-76)

ஐந்தாம் வகுப்பு

## புலமைப்பரிசில் பணம் பெற மேலும் எட்டுப்பேர் தெரிவு

### மொத்தம் 235 பேர் பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், நவ. 7

ஐந்தாம் வகுப்பு (6-ம் ஆண்டு) புலமைப் பரிசில் பரீட்சையி சித்தி எய்தி புலமைப் பரிசில் பணம் பெறத் தகுதியுடையவர்களின் எண்ணிக்கை அறுபத்திமூன்றிலிருந்து எழுபத்தொன்றாக உயர்ந்து உள்ளது.

எட்டு மாணவர்களின் பெயர்களும் தாமதமாகவே யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வந்து கிடைத்தன.

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளுக்கு மேல் பெற்று யாழ் மாவட்டத்தில் மொத்தம் 235 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். அவர்களில் 71 பேர் புலமைப்பரிசில் பணம் பெறத் தகுதியுள்ளவர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

புலமைப்பரிசில் பணம் பெறத்தெரிவான முதல் 63 மாணவர்களின் பெயர் விவரம் நேற்றைய உதயனில் வெளிவந்திருந்தது.

புதிதாகச் சேர்க்கப்பட்ட எட்டு மாணவர்களின் விவரம் வருமாறு:

1. எஸ். சுஜீதா (நல்லூர் இந்து தமிழ்மகளிர் கல்லூரி)
2. யு. ஜெயகௌரி (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்)
3. பி. இளங்குமரன் (கரணவாய் வேதாரணியேஸ்வா வித்தியாலயம்)
4. கே. தேவன் (கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்)
5. ரி. சுபாஜினி (திருநெல்வேலி இந்து தமிழ்கலவன்பாடசாலை)
6. கே. காஞ்சனா (இடைக்காடு மகாவித்தியாலயம்)
7. ஏ. சிவதேவி (கானாநகர் யாழ்ரன் கல்லூரி)
8. எஸ், அமுதா (அச்சுவேலி மகாவித்தியாலயம்)

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 மாணவர்களும், மன்னார் மாவட்டத்தில் 9 மாணவர்களும் வவுனியா மாவட்டத்தில் 8 மாணவர்களும், திருமலை மாவட்டத்தில் 12 மாணவர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மாணவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 8 மாணவர்களும், புலமைப்பரிசில் பணம் பெறத் தகுதியுடையவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

யாழ் மாவட்டத்தில் 161 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 235 மாணவர்களும் தாம் விரும்பிய பாடசாலைகளில் தமது கல்வியைத் தொடரும் வாய்ப்பை பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

### மாணவர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டது

நேற்றைய மௌன ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட சுலோக அட்டைகள் வருமாறு:-

‘கோட்டை முகாமை அகற்று’;

‘இன்று விபுல் நாளை?’...;

[illegible] கோயில்களா, இல்லை [illegible] ‘கல்வியில் கை வையாதே” (இ-5)

### கட்டுமரத்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

னர்.

புலிகளின் தரப்பில் இருந்தும் ஆறு அங்குல மோட்டோத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் ஏற்பட்ட சேத விவரம் பற்றி தெரியவில்லை. கடந்த சில காலங்களாக கடலில் மீன்பிடித்துவரும் மீனவர்களை சிப்பாய்கள் கைது செய்வதும் அவர்களது [illegible] மீனை [illegible] பறிமுதல் செய்து வருவதும் தெரிந்ததே. (இ-10)

### ஆண்டு இறுதி பரீட்சைத் தினங்கள்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ் கல்வித் திணைக்களத்தின்பரீட்சைப்சபையால் நடத்தப்படும் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைக்கான நேர அட்டவணைகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆண்டு 11க்கான பரீட்சைகள் யாவும் இம் மாதம் 17ஆம் திகதியும்:

ஆண்டுகள் 7 8, 9, 10க்கான பரீட்சைகள் யாவும் 25ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன என பரீட்சைச் சபைச் செயலாளர் திரு. கு சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

பாடங்களுக்கான விளுத்தாள்களை, பாடசாலைகளுக்குரிய இணைப்பு நிலையங்களில் பரீட்சைக்கு முதல்நாள் பெற்றுக்கொள்ளலாம் என்று கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)

### கோட்டை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டாது என கோட்டை இராணுவ அதிகாரி உத்தரவாதம் அளித்திருந்தார்.

இந்த உத்தரவாதத்தையும் மீறி கடந்த மாதம் 30 ஆம் திகதி கோட்டையிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மத்திய கல்லூரி மாணவர் தலைவன் விபுலானந்தன் மரணமானார்.

மத்திய கல்லூரியின் மீது ஏற்கனவே பல முறை ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன, அவையாவன-

26-5-86 மாலை:- மலசலகூடங்கள் சேதமுற்றன.

9.7.86 இரவு:- வட்டார கல்வியதிகாரியின் அலுவலகம் சேதமுற்றது.

20.8.86 காலை:- கல்லூரி மைதான மதில் உடைந்தது.

24. 8. 86 மாலை:- கல்லூரி விடுதிச் சாலையின் மேல்மாடிக் கட்டடக் கூரையும், சுவரும் சேதமுற்றன.

27. 8. 86 காலை:- பழைய சிற்றுண்டிச் சாலை, சுவர்கள், தண்ணீர்தாங்கி குடிநீர் விநியோக குழாய்கள் சேதமுற்றன.

27. 8. 86 மாலை:- கல்லூரி பஸ் சேதமாகியது.

28. 8. 86 மாலை:- உயிரியல் பரிசோதனைக் கூடம் சேதமாகியது.

7. 9. 86 :- 7 ஆம் ஆண்டு மாணவரின் வகுப்பறைக் கூரைகள், ஆய்வுகூடக் கூரைகள் சேதமுற்றன.

9. 9. 86:- தம்பர் நினைவு மண்டப கூரைகளும், மாடிகளும் சேதமுற்றன.

இவ்வாறான சேதங்கள், கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினால், மத்திய கல்லூரியில் மட்டுமல்ல வேம்படி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி ஆகியவற்றிலும் ஏற்பட்டுள்ளன.

இப்படி மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

### இரத்த தானம்

யாழ்ப்பாணம், நவ. 7

‘மஸ்கன்ஸ்’ அஸ்பெஸ்ரஸ் தொழிற்சாலை ஊழியர்கள் கடந்த வாரம் யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.

தொழிற்சாலையில் நடைபெற்ற இந்த வைபவத்துக்கு அதன் நிர்வாகம் நல்ஆதரவு வழங்கியது. (இ-10)

### புலிகள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூதூரில் இடம்பெற்ற அனைத்து தாக்குதல்களுக்கும் தலைமை ஏற்று மூதூரை படிப்படியாக எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார் கணேஷ்.

மேஜர் கணேஷ் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை விரட்டியடித்ததுடன் தமிழ் — முஸ்லிம் மக்களிடையே ஸ்ரீலங்கா அரசின் சதியால் ஏற்படவிருந்த கலவரங்களை முறியடித்து தமிழ் — முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் கட்டி வளர்த்தார்.

கடந்த வருடம் மல்லிகைத்தீவு, மணல்சேனை, மேன்காமம் ஆகிய பகுதிகளில் பெரும் இன ஒழிப்பைப் புரிந்து அங்கிருந்த இளம் பெண்களை கடத்திச் சென்று அவமானபபடுத்த சிங்கள இராணுவமும், ஊர்காவல் படையினரும் முயன்றனர்.

தெகிவத்தையில் உள்ள பாடசாலை ஒன்றில் பெண்களை மானபங்கப்படுத்த முயற்சித்த வேளை செய்தி கேட்டு விரைந்து இடத்தை கண்டு பிடித்து சிங்கள இராணுவத்துடனும் ஊர்காவல் படையுடனும் நேரடியாக மோதி பெண்களை மீட்டு மூதூர் மக்களின் உயிர்நாடியாக விளங்கினார் மேஜர் கணேஷ்.

இந்த வகையில் ஒவ்வோர் விடயத்திலும் மூதூர்மக்களின் பாதுகாவலனாக, மேய்ப்பனாக விளங்கிய மேஜர் கணேஷின் இழப்பையிட்டு மூதூர் 2 நாளாக துக்க தினம் அனுஷ்டிக்கின்றது.

#### ஹர்த்தால்வேண்டாம்

தமிழ் மக்களிடம் ஓர் வேண்டுகோள். துக்கத்தை அனுஷ்டிக்குமுகமாக எதுவித ஹர்த்தால்கள், அல்லது கடையடைப்புகள் அல்லது பாடசாலைப் பகிஷ்கரிப்புகள் போன்ற எம்மக்களைப் பாதிக்கும் எவ்விடயத்திலும் ஈடுபடவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

தியாகிகளின் சமாதிகளைப் பூக்களாலும், தோரணங்களாலும், ஆராதனைக்குரிய ஆலயமாக மாற்றலாமே ஒழிய வாழைமரங்களை வெட்டி வீதிக்கு வீதி நடுவதையும், தென்னை, பனை மரங்களைத் தறித்து வீதிகளில், நடுவதையும் முற்றாகத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

விற்பனைக்கு

இறைச்சிக்கான கோழிகள், மொத்தமாக விற்பனைக்குண்டு. நல்ல இன மாங்கன்றுகள், பலாக் கன்றுகள் விற்பனைக்குண்டு. உடன்தொடர்பு கொள்ளவும், இளைஞர் விவசாயப்பண்ணை, [பழைய விமாகி பாம்], கோப்பாய்.

New Science Academy
(B.M.Cக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

A/L 87 சனி, ஞாயிறு பிரிவு
8-11-1986 (சனி) ஆரம்பம்

| | | |
|---|---|---|
| மின்னியல் | — | திரு. மணியம் 8.30 – 10.30 |
| பிரயோக கணிதம்) தூயகணிதம் ) | — | திரு. விக்டர் 10.30 – 12.30 |
| ஒலியியல் | — | திரு. மணியம் 12.30 – 1.30 |
| இரசாயனவியல் | — | திரு. மணியம் 1.30 – 2.30 |

துரித மீட்டல் பயிற்சி வகுப்பு
சனி/ஞாயிறு 8.30 தாவரவியல்–திரு. பாலா
9.30 விலங்கியல் – திரு. இளங்கோவன்
10.30 விலங்கியல்–திரு.சிவபாதம்
11.30 பௌதிகவியல்– திரு. மணியம்
12.30 இரசாயனவியல்– திரு. மணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org